# TNPSC GROUP II (INTERVIEW) 2018 - Chennai

**Test Series : 019** **Test ID : 019**
**Number of questions: 200** **Test date: 27.10.2018**
**Name: ________________________________** **Time: 3 hrs**
**ID No: _____________________** **Marks : 300**
**Marks: No negative marks.**

1. பாடல்திறம் அறிந்து பொருத்துக.
A) தமிழ் கெழு கூடல் - மாணிக்கவாசகம்
B) தமிழ் வேலி ___ திருவிளையாடற்புராணம்
C) கூடலில் ஆய்ந்த ஒண்தீந் தமிழ் - புறநானூறு
D) ஆலவாய் - பரிபாடல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | B | C | D | A |
| B) | C | D | A | B |
| C) | A | B | D | C |
| D) | A | C | B | D |

2. மனித நாகரிகத் தொட்டில்.
A) பாபிலோனியா B) இலெமுரியா
C) மதுரை D) வாரணாசி

3. பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள ---- நூல் சுட்டுக.
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை
C) திருமுருகாற்றுப்படை D) பெரியபுராணம்

4. பண்டைத் தமிழர்தம் ஏற்றுமதி, இறக்குமதி பற்றிக் கூறும் நூல்.
A) தமிழ்விடு தூது B) நற்றிணை
C) குறுந்தொகை D) பட்டினப்பாலை

5. தனக்கெனத் தனிச்சிறப்பும் பல மொழிகள் தோன்றி வளர அடிப்படையாகவும் உள்ள மொழியே.
A) தாய்மொழி B) திராவிடமொழி
C) மூலமொழி D) தமிழ்மொழி

6. இந்தியாவில் பேசப்படும் மொழிகளை எத்தனை மொழிக்குடும்பங்களில் அடக்குவர்.
A) நான்கு B) இரண்டு
C) ஆறு D) மூன்று.

7. பொருத்துக.
A) ஈஸ்ட்மன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
B) எடிசன் - படச்சுருள்
C) எட்வர்டு மைபிரிட்சு - கருத்துப் படம்
D) வால்ட் டிஸ்னி - இயக்கப்படம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | C | A | B | D |
| B) | D | C | A | B |
| C) | B | A | D | C |
| D) | A | B | C | D |

8. "நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" பெருவெடிப்புக் கொள்கை பேசும் நூல்.
A) புறநானூறு B) திருமந்திரம்
C) திருவாசகம் D) தேவாரம்

9. இபான் ஒரு அமெரிக்க ------
A) இதழ் A) திரைப்படம்
C) கருத்துப்படம் D) செய்திப்படம்

10. அரிச்சந்திரனை ஒரு பொய் பேசவைக்க முயன்று தோற்றவர்.
A) தளபதி B) வசுவாமித்திரர்
C) ஆசிரியர் D) சோதிடர்

11. உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு.
A) தால்சுதாய் B) அரிஸ்டாட்டில்
C) லெனின் D) ஸ்டாலின்

12. தென்னாப்பிரிக்காவில் காந்திக்குக் கடுங்காவல் தண்டனை வழங்கிய ஆளுநர்
A) ஜான் ஈட்ஸ் B) ஜார்ஜ் நீட்
C) ஸ்மட்ஸ் D) டேவிட்சன்

13. திராவிடம் என்னும் சொல்லை முதன் முதலில உருவாக்கியவர்

A) நைடா B) சோம்ஸ்கி

C) குமரிலபட்டர் D) எல்லிஸ்

14. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கும்

A) தென்திராவிட மொழிகள்

B) நடுத்திராவிட மொழிகள்

C) வடதிராவிட மொழிகள்

D) திராவிடப் பெருமொழிகள்

15. தமிழ் இலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு

A) மறுமலர்ச்சிக் காலம்

B) பக்திக் காலம்

C) பொற்காலம்

D) உரைநடைக் காலம்

16. மன்னர்களை மட்டுமே மகிழ்வித்து வந்த கவிதை மரபை மாற்றி எளிய மக்களை நோக்கிக் கவிதைக் கருவியைத் திருப்பி அமைத்த பெருமைக்குரியவர்

A) இளங்கோவடிகள் B) பாரதியார்

C) பாவேந்தர் D) சேக்கிழார்

17. தமிழ், தமிழர், தமிழ் உணர்வு, பெண் விடுதலை, பொதுவுடைமை திராவிட இயக்கச் சிந்தனை ___ பாடுபொருளானது யாருடைய பாடல்களில்

A) சுரதா B) அப்துல் ரகுமான்

C) முடியரசன் D) பாரதிதாசன்

18. மங்கை யராகப் பிறப்பதற்கே ----- நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா --- யார் கூற்று.

A) பாரதிதாசன்

B) பாரதியார்

C) கவிமணி தேசிக விநாயகம்

D) நாமக்கல் கவிஞர்

19. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு குணமுண்டு --- கூறிய கவிஞர்.

A) நாமக்கல் கவிஞர் B) கவிமணி

C) பாவேந்தர் D) உவமைக் கவிஞர்

20. கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் -----

A) புலவர் குழந்தை B) முடியரசன்

C) நாமக்கல் கவிஞர் D) தாரா பாரதி

21. ஐந்திலக்கணம் பற்றிய மிகப்பழைமையான நூல்.

A) தொல்காப்பியம் B) அகத்தியம்

C) நன்னூல் D) இலக்கண விளக்கம்

22. யாருடைய சாயலில் பாரதியார் வசனகவிதை எழுதினார்.

A) கீட்ஸ் B) பைரன்

C) வால்ட் விட்மன் D) லெனின்

23. ந.பிச்சமூர்த்தி, புதுமைப்பித்தன், கு.ப. இராசகோபாலன். க.நா. சுப்பிரமணியன் முதலியோர் தொடக்கத்தில் புதுக்கவிதை எழுதிய இதழ்.

A) மணிக்கொடி B) சுதேசமித்திரன்

C) கல்கி D) ஆனந்த விகடன்

24. தொடர்பற்ற ஒன்றைத் தேர்க.

A) மணிக்கொடி B) எழுத்து

C) வானம் பாடிக் குழுவினர் D) சொல்

25. உச்சிமலையிலே ஊறும் அருவிகள்
ஒரே வழியில் கலக்குது
ஒற்றுமை யில்லா மனிதகுலம்
உயர்வு தாழ்வு வளர்க்குது

A) மு. மேத்தா

B) நா. காமராசன்

C) பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்

D) பிரபஞ்சன்

26. வாழை இலையோசை: வஞ்சியர்கை வளையோசை தாழை மடலோசை: தாயர்தயிர் மத்தோசை ___ பாடல் யாருடையது.

A) வாலி B) கண்ணதாசன்

C) சுரதா D) வாணிதாசன்

27. கண்ணதாசன் இயற்பெயர்.

A) கருப்பையா B) சாத்தையா

C) முத்தையா D) பாப்பையா

28. மாறுபட்டதைத் தேர்க
A) இயேசு காவியம்
B) மாங்கனி
C) ஆட்டனத்தி ஆதிமந்தி
D) சேரமான் காதலி

29. கண்ணதாசன் ஆசிரியராக இல்லாத இதழ்
A) தென்றல் B) புலமை
C) கண்ணதாசன் D) முல்லை

30. பொருத்துக.
A) எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே - 1) கவிமணி
B) சபைகளிலே தமிழெழுத்து முழங்க வேண்டும் - 2) நாமக்கல் கவிஞர்
C) பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும் - 3) பாரதியார்
D) தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது ஆனாலும் மக்கள் வயிறு காயுது -4) கண்ணதாசன்
- 5) மக்கள் கவிஞர்
- 6) பாரதிதாசன்
A) 6,1,2,5 B) 6,3,1,5
C) 6,4,5,1 D) 6,2,3,5

31. மக்கள் கவிஞர் - எனப் போற்றப்படுபவர்
A) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
B) நாமக்கல் கவிஞர்
C) சுரதா
D) கவிமணி

32. காந்தியக் கவிஞர் எனும் போற்றுதல் யாருக்கு?
A) இராமலிங்கனார் B) விநாயகனார்
C) சுத்தானந்த பாரதியார் D) திரு.வி.க

33. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் நூலாசிரியர்
A) ச. அகத்தியலிங்கம் B) செ. வை. சண்முகம்
C) பொற்கோ D) கால்டு வெல்

34. பொருந்தாத இணையைக் காட்டுக:
A) சிறுபஞ்சமூலம் - காரியாசான்
B) ஞானரதம் - பாரதியார்
C) எழுத்து - சி.சு.செல்லப்பா
D) குயில்பாட்டு - பாரதிதாசன்

35. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு --- யார் மொழி
A) பாரதி B) ஔவை
C) பூங்குன்றன் D) உலகநாதன்

36. தீதும் நன்றும் பிறர்தரவாரா - இக் கூற்று
A) பழமொழி B) நாலடியார்
C) சிறுபஞ்சமூலம் D) கணியன் பூங்குன்றன்

37. தொல்காப்பியம் கடற்பயணத்தை எவ்வாறு குறித்துள்ளது.
A) முந்நீர் வழக்கம் B) முந்நீர் பயணம்
C) நீர்வழிப் பிரிதல் D) பொருள் வயிற் பிரிவு

38. பழந்தமிழர், கிரேக்கரையும்உரோமானியரையும் எவ்வாறு அழைத்தனர்.
A) உவனர் B) எயினர்
C) யவனர் D) கவனர்

39. பெரிய கப்பலுக்கு உவமையாக அரசனது கோட்டை கூறப்படுள்ள சங்க இலக்கியம்.
A) மதுரைக் காஞ்சி B) பட்டினப் பாலை
C) புறநானூறு D) கலித்தொகை

40. ஆழி, ஆர்கலி, வாரணம், பௌவம் - இவை ஒருபொருட்பன்மொழியாகிக் குறிப்பது.
A) ஆறு B) குளம்
C) நிதி D) கடல்

41. புணை, திமில், அம்பி, வங்கம், பஃறி இவை ஒருபொருட்பன்மொழியாகிக் குறிப்பது.
A) மதில் B) வண்டி
C) சிங்கம் D) மரக்கலம்

42. புகார் நகரத்தில் நிறுத்தப்பட்ட நாவாய்களை யானையொடு ஒப்பிடும் இலக்கியம்.
A) புறநானூறு B) மதுரைக்காஞ்சி
C) பட்டினப்பாலை D) சிறுபாணாற்றுப்படை

43. சேர மன்னனின் துறைமுகம்.
A) கொற்கை B) முசிறி
C) புகார் D) வஞ்சி

44. பொன் தந்து மிளகு பெற்றுச் சென்றவர்கள்
(A) யவனர் (B) சீனர்
(C) பாலஸ்தீனியர் (D) பாபிலோனியர்

45. மார்க்கோபோலோ - எந்த நாட்டறிஞர்
(A) சீனா (B) வெனிசு
(C) எகிப்து (D) கிரீசு

46. அதியமானின் முன்னோர் காலத்தில் சீனாவில் இருந்து கொண்டுவந்து பயிரிடப்பட்டது?
(A) தென்னை (B) மிளகு
(C) வாழை (D) கரும்பு

47. கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்தகுடி - இடம் பெற்றுள்ள நூல்
(A) தொல்காப்பியம்
(B) பாரதியார் கவிதைகள்
(C) புறப்பொருள் வெண்பாமாலை
(D) பாரதிதாசன் கவிதைகள்

48. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - எனக் கூறும் நூல்
(A) புறநானூறு (B) திருவருட்பா
(C) தேவாரம் (D) பெரியபுராணம்

49. காலை மாலை உலாவிநிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே - யார் கூற்று?
(A) ஔவையார் (B) நாமக்கல் கவிஞர்
(C) கவிமணி (D) சுரதா

50. திராவிட மொழிகள் எத்தனை வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன?
(A) நான்கு (B) இரண்டு
(C) ஆறு (D) மூன்று

51. கீழ்கண்ட வாக்கியத்தை கவனிக்க
1. படச்சுருள் செல்லூலாய்டு எனும் பொருளால் ஆனது.
2. படம் எடுக்கப் பயன்படும் சுருள் : எதிர்ச்சுருள்
3. திரைப்படத்தைவிடச் செய்திப்படம் எடுப்பது எளிமையானது.

(A) 1, 2 சரி 3 தவறு (B) 1, 2, 3 சரி
(C) 1, 2 தவறு 3 சரி (D) 1 சரி 2, 3 தவறு

52. பொருத்துக
(a) அந்தக் கேணியும் எந்திரக் கிணறும் - 1. பெருங்கதை
(b) பயவாக் களரனையர் கல்லாதவர் - 2. திருவள்ளுவம்
(c) உடம்பார் அழியின் உயிரார் அழிவர் - 3. திருவாசகம்
(d) புல்லாகிப் பூடாய் ......... - 4. திருமந்திரம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 1 | 2 | 4 | 3 |
| (C) | 1 | 3 | 2 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

53. "பண்ணொடு தமிழொப்பாய்" நூல் பெயர்
(A) தேவாரம் (B) திருப்பாவை
(C) திருவருட்பா (D) பெரிய திருமொழி

54. நாகரிக வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல், இனக்கலப்பு போன்ற காரணங்களால் ---------------- என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்
(A) நோயாளி (B) அழிவு
(C) மருந்தே உணவு (D) தீராப்பிணி

55. உண்ட உணவு, செரித்த பின்னரே மீண்டும் உண்ணவேண்டுமெனத் ------------- கூறுகிறது.
(A) யுனானி (B) ஆயுர்வேதம்
(C) ஓமியோபதி (D) தமிழ் மருத்துவம்

56. உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை பெறுவதற்கும் உடலில் உள்ள கழிவுப் பொருள்கள் வெளியேற்றுவதற்கும் ---------- இன்றியமையாதது.
(A) மருந்து (B) உப்பு
(C) உடற்பயிற்சி (D) நீர்

57. வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும் எனவே தான் --------- மீதூண் விரும்பேல் என்றவர்
(A) திருவள்ளுவர் (B) சித்தர்
(C) திருமூலர் (D) ஔவையார்

58. சிங்கவல்லி, ஞானப்பச்சிலை - அறிந்த பெயர்
(A) துளசி (B) மல்லி
(C) தூதுவளை (D) வல்லாரை

59. குமரிகண்ட நோயக்கு குமரிகொடு - முதல் குமரி பெண், இரண்டாவது குமரி - கூறுக
(A) மருந்து (B) ஆலோசனை
(C) துளசி (D) கற்றாழை

60. "இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்" என்று இராமலிங்கரைப் போற்றியவர்
(A) சிதம்பர சுவாமிகள்
(B) திகம்பர சாமியார்
(C) திரு.வி.க
(D) தாயுமானவர்

61. கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம் - இதன் யாவரும் அறிந்த பெயர் தருக
(A) குப்பமேனி (B) கீழாநெல்லி
(C) கரிசலாங்கண்ணி (D) முசுமுசுக்கை

62. இருபொருள்களுக்கு இடையே உள்ள ஒப்புமையைக் கூறி, பின்னர் அவற்றை வேறுபடுத்துவது.
(A) உருவக அணி
(B) பிறிதுமொழிதல் அணி
(C) வேற்றுமை அணி
(D) வருநிலை அணி

63. 1913-ல் காந்தியடிகள் தலைமையில் நடந்த வால்க்ஸ்ரஸ்ட் போராட்டத்தில் பங்குகொண்ட தமிழப்பெண்
(A) அஞ்சலையம்மாள் (B) இராமாமிர்தம்மாள்
(C) வள்ளியம்மை (D) அம்புஜத்தம்மாள்

64. என்னுடைய சகோதரியின் மரணத்தைவிடவும்------ இன் மரணம் எனக்கு பேரிடியாக இருந்தது என்று காந்தியடிகள் மனம் வருந்தினார்.
A.கமலா நேரு
B.அம்புஜத்தம்மாள்
C.விஜயலக்ஷ்மி பண்டிட்
D.வள்ளியம்மை

65. இந்தியன் ஒப்பீனியன் - ஒரு
A.நாவல் B.செய்திப்படம்
C.கவிதை D.இதழ்

66. தில்லையாடி எந்த மாவட்டத்தில் உள்ளது
A.மதுரை B.தஞ்சை
C. நாகப்பட்டினம் D.விருதுநகர்

67. தில்லையாடி வள்ளியம்மை மாளிகை எங்குள்ளது.
A. தில்லையாடி B.தென்னாபிரிக்கா
C.மதுரை D.சென்னை

68. மங்கம்மாளின் படைத்தளபதி
A. கருணாகரன் B. நரசப்பையன்
C. நஞ்சப்பன் D. இரவிவர்மன்

69. கன்னியாகுமரிக்கு மதுரைக்கும் இடையே அமைந்த நெடுஞ்சாலை .
A. மங்கம்மாள் சாலை
B. மதுரை நெடுஞ்சாலை
C. கிழக்குக் கடற்கரைச்சாலை
D. யாதுமில்லை

70.மங்கம்மாள், மதுரை மீனாட்சி கோவிலில் என்ன திருவிழாவிற்கு ஏற்பாடு செய்தார்
A. தெப்போற்சவம்
B. பிரம்மோற்சவம்
C. ஊஞ்சல் உற்சவம்
D. ஏசல் உற்சவம்

71. தென்னாப்ரிக்காப் போராட்டத்தில பங்கு பெற்றபோது தில்லையாடி வள்ளியம்மை வயது
A. முப்பது B. முப்பது ஐந்து
C. பதினைந்து D. நாற்பது

72. தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்வதொழுக லான் பயின்றுவரும் அணி
A.உவமை அணி
B. வஞ்சப்புகழ்ச்சி அணி
C.வேற்றுமை அணி
D. உருவாக அணி

73. சிலேடை என்பதன் வேறுபெயர்
A. இரட்டுற மொழிதல்
B. தனிப்பட வருதல்
C. மீண்டும் மீண்டும்வருதல்
D. திரும்பி வருதல்

74. மூவகை மொழியால் வரும் பொதுமொழி யாவும் அணியில்
A. வேற்றுமை அணி
B. உவமை அணி
C. பிரிமொழிச்சி லேடை
D. செம்மொழிச்சி லேடை

75.உவமையைக் கூறிக் உவமேயம்(பொருள்) பெற வைப்பது.
A. உருவக அணி B. வேற்றுமை அணி
C. உவமை அணி D. பிரிமொழிதலணி

76. குணம்நாடி க் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்-இங்குப் பயின்று வரும் அணி.
A. உவமை அணி
B. சொற்பொருள் பின்வருநிலை அணி
C. பொருள்பின்வருநிலை அணி
D. சொல் அணி

77. சிற்றிலக்கிய இலக்கணம் கூறும் நூல்
A.இலக்கண விளக்கம்
B. நன்னூல்
C.தொல்காப்பியம்
D.அகத்தியம்

78. குட்டித் தொல்காப்பியம் எனப் போற்றப்படுவது.
A.நன்னூல்
B.இலக்கணக் கொத்து
C.சுவாமிநாதம்
D.இலக்கணவிளக்கம்

79.சின்னநூல் எனவும் அழைக்கப்படுவது
A.நேமிநாதம்
B.மாறனகப்பொருள்
C.தண்டியலங்காரம்
D. யாப்பருங்கலம்

80. பொருத்துக
A. வீரசோழியம் - 1 . சுவாமி கவிராயர்
B. இலக்கண விளக்கம் - 2 வீரமாமுனிவர்
C. தொன்னூல் விளக்கம் - 3 வைத்திய நாத தேசிகர்
D.சுவாமிநாதம் - 4 . புத்தமித்திரர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 1 |
| B) | 3 | 1 | 4 | 2 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 3 | 2 | 4 | 1 |

81. தண்டியலங்காரம் , மறனலங்காரம் - இவை எதைப் பற்றிக் கூறும் நூல்கள்.
A.எழுத்துகள் B.அணிகள்
C.யாப்பு D.செய்யுள் வகை

82. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழக்கை பண்பும் பயனும் அது - அணி கண்டு காட்டுக.
A.நிரல்நிறையணி
B. ஏகதேச உருவக அணி
C.உவமை அணி
D.உருவக அணி

83. பல பொருள்களுள் ஒன்றனை உருவகப்படுத்தி அதனோடு தொடர்புடைய மற்றொன்றினை உருவகப்படுத்தாமல் இருப்பது.
A. எடுத்துக்காட்டு உவமை அணி
B. வேற்றுமை அணி
C. ஏகதேச உருவக அணி இல்பொருள்
D. உவமை அணி

84. வந்த சொல்லே பலமுறை வந்து வேறுபல பொருள் தரும் அணி.
A. சொற்பொருள் பின்வருநிலையணி
B. பொருள் பின்வரும்நிலை அணி
C. சொல் பின்வருநிலை அணி
D. வேற்றுப் பொருள்வைப்பு அணி

85. திராவிட மொழிகள் மொத்தம்
A. 24 B. 28 C. 4 D.18

86. நதிகள் கடலில் கலக்குமிடங்கள் துறைமுகம் என்ற ஏற்பாட்டை அறிந்து பொருத்துக
1 .கொற்கை - A .காவிரி
2 . பூம்புகார் - B . நைல்
3 . முசிறி - C . தாமிரபரணி
4.அலெக்ஸாண்ட்ரியா - D .பேரியாறு

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| A | c | a | b | d |
| B | a | c | d | b |
| C | c | a | d | b |
| D | b | d | a | c |

87. தமிழில் கிடைக்கப் பெற்றுள்ள ஐந்திலக்கண நூல்களுள் காலத்தால் முந்தியது.
A. தொல்காப்பியம் B. அகத்தியம்
C. வீரசோழியம் D. நன்னூல்

88. ”யவனப்ரியா”- என்பது எதனைக் குறிக்கும்?
A. மிளகு B. முத்து
C. சங்கு D. தந்தம்

89. நன்னூல் ஒரு வழி நூல் எனில் அதன் முதல் நூல் எது ?
A. அகத்தியம் B. தொல்காப்பியம்
C. இலக்கண விளக்கம் D.நேமிநாதம்

90. தவறான இணையைத் தேர்க

A.வீரசோழியம் - பௌத்த சமயத்தவர்

B.நன்னூல் - சமண சமயத்தவர்

C.யாப்பருங்கலம் - சமண சமயத்தவர்

D.நேமிநாதம் - பௌத்த சமயத்தவர்

91. கீழுள்ளவற்றுள் எது தற்குறிப்பேற்ற அணிக்குப் பொருந்தும் ?

A. இயல்பு நிகழ்ச்சியில் தன் கருத்தினை ஏற்றல்

B. தன் கருத்தைக் கூறி பிறர் கருது விலக்கல்

C. நடக்காத நிகழ்ச்சியை நடந்ததாகக் கூறல்

D. ஒன்றை விளக்கிப் பிறிதொன்றைச் சொல்லல்

92. கொடுக்கப்பட்டுள்ளவற்றில் தற்குறிப்பேற்றணி தேர்க:

A. யானை தன் துதிக்கையை உயர்த்தியது தன்னைக் கவளமென எண்ணி விழுங்கி விடுமோ என எண்ணி நிலா மறைந்தது .

B. யானை மிக விரைந்து நடந்தது அதனைக் கண்ட பிற விலங்கினங்களும்,விரைவாக ஓடின

C. இருமன்னர்கள் ஒருவரையொருவர் எதிர்கொண்ட காட்சி யானைகள் சந்தித்தது போல் தோன்றியது

D. எங்கு நோக்கினும் இருள். இருளின் கருமை மேகத்தையும் மிஞ்சியது.

93. நீருக்கும் கண்ணாடிக்கும் இரட்டுற மொழிதலாய் அமையத்தக்கது எது ?

A. ஆடிக் குடத்தடையும்

B. தேங்கிய நிற்கும்

C. மூடித்திறக்கின் முகங்காட்டும்

D. வழவழப்பாயிருக்கும்

94. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்டவடு இக்குறட்பாவில் அமைந்த அணி.

A. உவமை

B. வேற்றுமை

C. பிறிதுமொழிதல்

D. ஏகதேச உருவகம்

95.பொருத்துக

1.ஐயனாரிதனார் - A. வீரசோழியம்

2.அமிர்தசாகர் - B. தொன்னூல் விளக்கம்

3.புத்தமித்திரர் - C. யாப்பருங்கலக் காரிகை

4. வீரமாமுனிவர் - D. புறப்பொருள் வெண்பாமாலை

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| A | B | D | C | A |
| B | A | C | B | D |
| C | C | A | D | B |
| D | D | C | A | B |

96. சிற்றிலக்கியங்களின் அமைப்பு முதலானவற்றை விளக்கும் பாட்டியல் நூல்களுள் முதன்மை.

A. பன்னிரு பாட்டியல்

B. நவநீதப் பாட்டியல்

C. இலக்கண விளக்கப் பாட்டியல்

D. சிதம்பர பாட்டியல்

97. ஒரு பொருள் குறித்த பலசொற்கள் ஒரு செய்யுளில் இடம் பெறுவது என்ன அணி

A.இரட்டுற மொழிதல்

B. வேற்றுமை

C.பொருள் பின்வருநிலை

D.தற்குறிப்பேற்ற

98. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு- பயிலும் அணி

A. உவமை

B. வேற்றுப் பொருள் வைப்பு

C. எடுத்துக்காட்டு

D. உவமை வேற்றுமை

99. கீழ்வருவனவற்றுள் எது இல்பொருள்உவமை அணியின் வரையறை ?

A.காணமுடியாத ஒன்றைக் கண்டதாகச் சொல்லுதல்

B. இல்லாத பொருளோடு இயல்பான பொருளை இணைத்தல்

C.இல்லாத பொருளின் இயல்பினைக் கூறுதல்

D.நடைமுறைக்குப் பொருந்தாததைக் கூறுதல்

100.சொற்பொருள் பின்வருநிலை அணியின் வரையறை யாது?

A.ஒரே பொருளைத் தரும் வெவ்வேறு சொற்கள் வருதல்

B.வெவ்வேறு பொருளைத்தரும் ஒரே சொல் வருதல்

C.ஒரே சொல்மாறாத பொருளில் வருதல்

D.வெவ்வேறு சொல் வெவ்வேறு பொருளில் வருதல்.